வேளச்சேரி மேற்கு பகுதியில் பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமையில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார். இதில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி கூட்டணி கட்சி வேட்பாளர் ஜெ.எம்.எச்.ஹசன் மௌலானா மற்றும் வட்டச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், ஜி.பி.எஸ்.பாலசதீஸ், கே.என்.தாமோதரன், த.பார்த்திபன், தே.கோபி, எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் கு. செல்வபெருந்தகை, தொகுதி தேர்தல் மேற் பார்வையாளர் கே ஜி பாஸ்கர்சுந்தரம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் ஆகியோர் தலைமையில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கிய ஆதனூர், மாடம்பாக்கம், காவனூர், நாட்டரசன்பட்டு ஒரத்தூர் ஊராட்சிகளில் பொதுமக்களிடம் 'கை' சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இரா.பாலன் தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. – வ.பெ.சுரேஷ் – இரா.செந்தில்குமார் முன்னிலை!

இராயபுரம் 48வது வட்டத்தில் டாக்டர் அ.சுபேர்கான் வாக்கு சேகரிப்பு!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. – கவிஞர் காசிமுத்து மாணிக்கம் – ந.மனோகரன் பங்கேற்பு!

சென்னை, ஏப். 7-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கழகத் தலைவர் - முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்லாசியுடன் 08.04.2026 புதன்கிழமை காலை 7.00 மணியளவில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் டாக்டர். சுபேர்கான், 48வது வட்டத்தில் அனைத்து தெருக்களிலும் வாக்கு சேகரிக்க வருகை தர உள்ளார்.

வட்டச் செயலாளர் இரா. பாலன் தலைமையில் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் வ.பெ. சுரேஷ், இரா.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இவ்வாக்கு சேகரிப்பில், மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கவிஞர் காசிமுத்து மாணிக்கம், ந.மனோகரன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

எனவே தாங்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் இரா.பாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி

தி.மு.க கழக வேட்பாளர்களை ஆதரித்து எர்ணாவூர் நாராயணன் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.07

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ராயபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சுபேர்கான் மற்றும் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோரை ஆதரித்து வடசென்னை அனைத்து வியாபாரிகள் வணிகர்களின் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு சமத்துவ மக்கள் கழகம் சார்பாகவும் தேர்தல் பிரச்சார கூட்டம் தண்டையார்பேட்டையில் எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விராசாமி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரீம்ஸ் மூர்த்தி, சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தா.இளையஅருணா, ஆர்.கே.நகர் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், வண்ணாரப்பேட்டை அனைத்து வியாபாரி சங்க செயலாளர் தங்கதுரை, பொருளாளர் பாஸ்கர், பெரிய மார்க்கெட் வியாபார சங்க தலைவர் வேதா, நேதாஜி நகர் அனைத்து வியாபாரி சங்கம் தலைவர் ஜெயபால், எழில் நகர் பகுதி வியாபார சங்கத் தலைவர் ராஜேஷ், தண்டையார் பேட்டை வியாபார சங்கத் தலைவர் அன்பழகன், மிட் டாய் வியாபாரிகள் சங்கத் தலைவர் கணேசன்,

தமிழ்நாடு வணிகர் சங்க பேரவை வடசென்னை மாவட்ட தலைவர் ராஜன், வ.உ.சி.நகர் வியாபாரி சங்கத் தலைவர் சங்கர், டி.எஸ்.எஸ் நாடார் சங்கத் தலைவர் மனோகரன், காசிமேடு வியாபார சங்கத் தலைவர் சுப்பு ராஜ், நேதாஜி நகர் நாடார் உறவின்முறை தலைவர் ஏ.டி. மணி, இஸ்லாமிய அக்ஷயா நல தலைவர் முகமது அலி, தமிழ்நாடு சமையல் கலை சங்க தலைவர் இனியவன், கழகப் பொருளாளர் கண்ணன், தலைமை நிலைய செயலாளர் தங்கமுத்து,

வடசென்னை மாவட்ட செயலாளர் பாஸ்கர், ஆர்.கே.நகர் பகுதி செயலாளர் ராஜேஷ், ராயபுரம் பகுதி செயலாளர் செல்வகுமார், பெரம்பூர் பகுதி செயலாளர் ரமேஷ் கண்ணா, 50வது வட்ட செயலாளர் சாபுதீன், 39வது வட்ட செயலாளர் ராபர்ட், 38வது வட்ட செயலாளர் சண்முகசுந்தரம், 42வது வட்ட செயலாளர் வேல்முருகன், 43வது வட்ட செயலாளர் சங்கர பாண்டியன், துறைமுகம் பகுதி செயலாளர் ரங்கன்,

49வது வட்ட செயலாளர் துரைமணி, வடசென்னை மாவட்ட செயலாளர் சாமுவேல், பொருளாளர் சுடலை மணி, மாவட்ட துணை செயலாளர் சதீஷ், மற்றும் மகளிர் அணி செயலாளர் குணசுந்தரி, மற்றும் 150 க்கும் மேற்பட்ட நாடார் சங்கங்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் அமைப்புகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக திண்ணை பிரச்சாரம் ஈடுபடுவதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு எம்.ஜி.ஆர். கழகம் ஆதரவு!

சென்னை, ஏப்.7-

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, எம்.ஜி.ஆர்.கழகம் ஆதரவு தெரிவித்தது.

எம்.ஜி.ஆர்.கழகப் பொதுச்செயலாளர் டி.ராமலிங்கம் அவர்கள், 06.04.2026 மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதாக எம்.ஜி.ஆர்.கழக பொதுச்செயலாளர் டி.ராமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு:

"எம்.ஜி.ஆர்.கழகம் தலைவர் ராமலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, வருகின்ற 23.4.2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிப்பதாக எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், எம்.ஜி.ஆர். கழக மாவட்ட செயலாளர்கள் நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் அனைவரும் தங்களுடைய பகுதியில் உள்ள தி.மு.கழக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் இணைந்து கூட்டணி வெற்றி பெற முழு மனதுடன் பாடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

குறிஞ்சி தமிழர் வள்ளி மக்கள் பேரவை ஆதரவு!

சென்னை, ஏப்.7- கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, குறிஞ்சி தமிழர் வள்ளி மக்கள் பேரவை ஆதரவு தெரிவித்தது.

குறிஞ்சி தமிழர் வள்ளி மக்கள் பேரவை நிறுவனர் - மாநிலத் தலைவர் எஸ். எஸ்.ஜெகநாதன் அவர்கள், 06.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ராயபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அ.சுபேர்கான் மற்றும் ஆர்.கே. நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோரை ஆதரித்து வடசென்னை அனைத்து வியாபாரிகள் வணிகர்களின் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு சமத்துவ மக்கள் கழகம் சார்பாகவும் தேர்தல் பிரச்சார கூட்டம் தண்டையார்பேட்டையில் எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலாநிதி விராசாமி எம்.பி, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, தாஇளைய அருணா, எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஏ.டி.மணி, மற்றும் 150 க்கும் மேற்பட்ட நாடார் சங்கங்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் அமைப்புகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக திண்ணை பிரச்சாரம் ஈடுபடுவதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

சைதாப்பேட்டை தொகுதியில் திராவிட மாடல் அரசினால் நிறைவேற்றப்பட்ட சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை எடுத்துக்காட்டி

தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் அனல் பறக்கும் தீவிரப் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.7-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (642026) காலை 7 மணிக்கே 139வது வட்டத்தில் வீதி, வீதியாக நடந்தேச்சென்று பொதுமக்களிடம் தீவிரமாக வாக்குச் சேகரித்தார்.ஜோதிராமலிங்கம் நகரில் தொடங்கி ராஜா பாதர் தெரு, கிருஷ்ணன் தெரு, பாஸ்கரன் தெரு, கன்னியப்பன் தெரு, வி.கே.மகேதேவன் தெரு, முரசொலி மாறன் தெரு, கங்கையம்மன் கோயில் தெரு, மாணிக்கம் தெரு, சிவகுரு தெரு, பழனியப்பன் தெரு, ராகவன் தெரு, இளங்கோ தெரு, முருகேசன் தெரு, வெங்கடாசலம் தெரு, ஜானகிராமன் தெரு ஆகிய தெருக்கள் வழியாக வந்து, எஸ்.பி.சிதம்பரம் சாலை, வடிவேல் தெரு, பூங்காவணம் தெரு,கோவிந்த சாமி தெரு, கிண்டி ரத்தினம் தெரு, அப்பைய மேஸ்திரி தெரு, கங்கையம்மன் கோயில் தெரு, முத்தமிழ் நகர், ஏரிக்கரைதெரு, பள்ளி கூடத் தெரு, பள்ளிக்கூட 1 முதல் 8 வரை உள்ள தெருக்கள் வரை நண்பகல் 12.30 மணி வரை வாக்குச் சேகரித்தார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மாலை 4 மணிக்குத் தொடங்கிய வாக்குச் சேகரிப்பு பிரச்சாரம் , முத்துமாரியம்மன் கோயில் தெருவில் தொடங்கி ஆர்.வி.நகர் 75வது தெரு, 76வது தெரு, 69ஏ தெரு, 69வது தெரு, 72வது தெரு, 74வது தெரு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பிளாக்குகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் பொதுமக்களைச் சந்தித்து வாக்குச் சேகரித்தார். தொடர்ந்து ஐ.ஜெ.கே.எம்.என்.எஸ்.ஓ.பி., ஆர்.வி. நகர் 73வது தெரு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பிளாக்குள் ஏ - ஏஏ பிளாக்குகள் வரை, 67வது தெரு, 68 வது தெரு, ராகவன் காலனி 1 முதல் 5 தெருக்கள் , அண்ணாமலை நகர் 1 முதல் 3 தெருக்கள், பெரியார் ராமசாமி தெரு, பிள்ளையார் கோயில் தெரு, அண்ணா தெரு, காமராஜர் தெரு, வாசுகி தெரு, வ.உ.சி. தெரு, ஜெயராம் தெரு இரவு 9 மணி வரை நடந்தேச் சென்று பொதுமக்களைச் சந்தித்து வாக்குச் சேகரிப்பில், தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளோடு வாக்குச் சேகரித்தார்.

அப்போது பொதுமக்கள் வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பளித்தும், பூக்கள், சால்வைகள், ஓவியங்கள், புறாக்கள், போன்றவற்றை அளித்தும், தங்களது அன்பை வெளிப்படுத்தி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.அப்போது கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

சைதாப்பேட்டையில் தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.கழகத் தலைவரின் அறிவார்ந்த அறிவுரையுரையேற்று, சைதாப்பேட்டையை வளர்ச்சிமிக்க தொகுதியாக, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் தொழில்நகரமாக மாற்றுவதற்கு சிறப்பான, சீர்மிகுந்த திட்டங்கள், செயல்படுத்தி வருவதாக பொதுமக்களிடம் தெரிவித்தார். இந்த 139வது வார்டுக்கு செய்யப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் நினைவுகூர்ந்தார். அதன் விவரம் வருமாறு:

சைதாப்பேட்டை சட்ட மன்றத் மண்டலம் 10, வார்டு 139, அண்ணாமலைநகர் 3வது தெருவில் பன்னோக்குக் கட்டிடம் (Proposed Construction of Multi Purpose Hall) கட்டும் பணிக்கு 2021 2022ஆம் ஆண்டு சைதாப் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.33,03,000/ ஒதுக்கப்பட்டு பணிகள் முடிவுற்று பன்னோக்குக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வார்டில் 0.25 கி.மீ. நீளத்தில் ரூ.12 லட்சம் செலவில் 2 உட்புறச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. ரூ.25 லட்சம் செலவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், ரூ.48 லட்சம் செலவில் இரண்டு பொதுக்கழிப்பிடங்கள், 1.6 கி.மீ. நீளத்தில் 13 உட்புற சாலைகள் ரூ.88 லட்சத்திலும், 1.1. கி.மீ நீளத்தில் 6 மழைநீர் வடிகால் பணிகள் ரூ.6 கோடியே 10 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூ.28.4 லட்சம் செலவில் கட்டடப் பணிகளும்,

ரூ.49 லட்சம் செலவில் உடற்பயிற்சிக் கூடம், ரூ.50 லட்சத்தில் உடற்பயிற்சிக் கூடமும், ரூ.83 லட்சம் செலவில் விளையாட்டு மைதானமும், ரூ.56 லட்சம் செலவில் 1.1 கி.மீ. நீளத்திற்கு 10 உட்புறச் சாலைகளும், ரூ.2 கோடியே 10 லட்சம் செலவில் மயானபூமியும், 1.2 கி.மீ. நீளத்திற்கு 9 உட்புறச் சாலைகள் ரூ.89 லட்சம் செலவிலும், 0.85 கி.மீ. 2 மழைநீர் வடிகால்வாய்கள் ரூ.3 கோடியே 55 லட்சம் செலவிலும், ஜாபர்கான்பேட்டை கெனால் ரூ.5 கோடியே 29 லட்சம் செலவிலும், பள்ளிக் கட்டிடங்கள் ரூ.8 கோடி செலவிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தெருவிளக்குகள் மற்றும் மின்கம்பங்கள் ரூ.64 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதேபோன்று தாயுமானவர் திட்டம், இருபால் மாணவர்களுக்கான தமிழ்புதல்வி, தமிழ்புதல்வன் கல்வி உதவித்தொகை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகைபோன்ற எண்ணற்றத் திட்டங்களால் அனைத்துத் தரப்பு மக்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் அரசினையும், மக்களின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் போற்றிப் பாராட்டி, சைதாப்பேட்டை தொகுதி தி.மு.க.வின் கோட்டைதான் என்பதை மீண்டும் நிரூபிக்கும் தேர்தலாக, வரலாற்றில் இப்படியொரு வெற்றியை தி.மு.கழகம் பெற்றதில்லை என்பதை தமிழ்நாடு முழுவதும் மெய்ப்பிக்கும்.

இவ்வாறு வேட்பாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டக் கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம், சைதைத் தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க -ம.ஜேக்கப், பாண்டுரங்கன், ம.தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க - ஆனந்தன், எஸ்.டி.பி.ஐ. - அபுதாகிர், கி.பி.ஐ - சிவா, ம.ம.க சாகுல் அமீது, கதிர், ம.நீ.மை - கதிர், ஐ.யூ.எம்.எல். - அப்துல் கலாம் உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.

வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து

133(அ) வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் பி.மாரி அறிக்கை!

சென்னை, ஏப்.7

தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து 133 (அ) வட்ட தி.மு.க ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து வட்டச் செயலாளர் பி. மாரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தியாகராய நகர் மேற்குப் பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. தலைமையில் இன்று (07.04.26 செவ்வாய்க் கிழமை) மாலை 6 மணிக்கு மேட்லி சாலையில் உள்ள மணமகழ் மன்றத்தில் நடைபெறுகிறது.

133(அ) வது வட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக தியாகராயநகர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

தியாகாயநகர் மேற்குப குதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. மற்றும் கிழக்குப்பகுதி செயலாளர் கோ.சு. மணி ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

அதுபோது 09-04-26 அன்று வாக்கு சேகரிப்பு குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் அணி தொண்டர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி, பொறியாளர் அணி, பாக முகவர்களின் அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் பி.மாரி தெரிவித்துள்ளார்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர்கானை ஆதரித்து 48வது வட்டத்தில் கழக செயல்வீரர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் இரா.பாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் வட்ட நிர்வாகிகள் பாகமுகவர்கள் மூத்தமுன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.